International Journal of Innovative Technology and Exploring Engineering (IJITEE)
ISSN: 2278-3075, Volume-8 Issue-12, October 2019

# Enhancing English Vocabulary in Low Proficient Learners using Online Tools with Special Reference to Arts and Science Colleges

**Fennila James S, S. Mercy Gnana Gandhi**

***Abstract:*** *In today's world of development any individual is in need of developing the employability skills in order to grow and settle in their profession. Their possession of hard skills such as education, experience and expertise does not guarantee them perfect job opportunities. Low proficient learners from Arts and Science Colleges find it difficult to get reasonable jobs because they lack employability skills. This is an attempt to analyze the role of technology in the development of employability skills particularly English vocabulary in the low proficient learners of Arts and Science College. 20 students from 3 different departments were given assignments to be done using 3 online tools. Assessment has been made to find out some difference in training the low proficient learners from Arts and Science. The result shows a tremendous change in attitude in learning vocabulary in the low proficient learners from Arts and Science. English vocabulary can be. The soft skills syllabus prescribed can be enriched and made more interesting especially for the low proficient learners with the addition of the online tool 'Memrise" for learning vocabulary. This will pave a path to those that found learning English difficult.*

***Keywords:*** *Employability skills, Technology, Vocabulary, Low Proficiency, learners.*

## I. INTRODUCTION

The low proficiency learners of Arts and Science colleges are always at a risk of poor skill development because of many setbacks in their way of living and social background. A general study analysis is essential, in order to identify their inabilities and give suitable suggestions and recommendations for their development and upliftment. Teaching and learning has many sources of reference unlike ten to fifteen years back. Education offers new technology content every day. The role of online technology tools in the development of employability skills in low proficiency learners particularly vocabulary has been analyzed. The analysis brings out and propagates the positive impact of online tools in the development of vocabulary in these low proficient learners of Arts and Science colleges.

Revised Manuscript Received on October 05, 2019.
**Fennila James** S, Research Scholar, Department of English Sathyabama Institute of Science and Technology fennila@gmail.com
**Dr. S. Mercy Gnana Gandhi**, Professor, Department of English Sathyabama Institute of Science and Technology drmerci2010@gmail.com

It will prove to be a launching pad in boosting confidence, in the use of vocabulary in these low proficient learners. The low proficient learners will be motivated if they are given an opportunity to explore with something which is interesting and enjoyable.

## LITERATURE REVIEW

K. Alex (2009), comments that the employability skills or soft skills are, "the non-technical, intangible, personality specific skills that determine one's strength as a leader, listener, negotiator and mediator". According to Mercy V. Chaite (2016), "a degree can provide transferable skills, but it is also vital to take every opportunity to identify and further develop these skills, as much as personal qualities and attributes." According to her, student's employability upon graduation significantly improves if they spend time and energy in developing non-academic skills throughout university. These skills help a person excel and be a successful person in their profession. These skills cannot be taught but developed through proper training. Theory based education without skill development does not help an individual acquire the employability skills needed for development. "The goal of language teaching is to develop learners' communication competence and equip learners with the ability to use the language for communication" Cook (2001).
Horwitz et al. (1991), language anxiety means, "the feeling of nervousness, worry or uneasiness experienced by foreign language students." (Foss et al., 1991) says, "many students especially in classroom situation find that learning a foreign language is stressful, especially if they have to perform, something using foreign language, owing to the fear of making mistakes, feeling of high self-consciousness, and the desire to be perfect when speaking." Sunanda Mahesh Shinde et al., (2015) "language learners can communicate effectively by using their hands imitating sounds, inventing new words, or describing what they mean." They are communication strategies. "Communication strategies are attempts to bridge the gap between the linguistic knowledge of the second - language learner and the linguistic knowledge of his or her interlocutor in real communication situations" Mojtaba Maghsodi (2010) declares, "mastery of vocabulary is an essential component of second language acquisition."According to Wilkins (1972) "without grammar very little can be conveyed, without vocabulary nothing can be conveyed."

# LITERARY FINDINGS

## INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH

ISSN 2278-2311

### பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது
சேலம்.


தமிழ்த்துறை

இணைந்து நடத்தும்

7

பன்னாட்டுக் கருத்தரங்கம் அக்டோபர்-04-2019

### இலக்கண இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்



## OCTOBER - 2019

visit us : www.kongunadupublications.com
kongunadupublications@gmail.com

Scanned with CamScanner

# தொல்காப்பியம் குறிப்பிடும் வாழ்வியல்

*முனைவர் D.ஜெமிலா மார்ஷல், தமிழ்த்துறைப் பேராசிரியர், மார்கிரிகோரியஸ் கல்லூரி, சென்னை-34

மனிதன் ஆதியில் படிப்படியாகச் சைகைகளின்று ஒலியும், ஒலியின்று பேச்சு மொழியும், பேச்சு மொழியினின்று எழுத்து மொழியும் அமைத்துக் கொண்டு, மொழி நாகரிகத்திலும் வாழ்க்கை முறையிலும் முன்னேற்றம் அடைந்தான் என்பது அறிஞர்களின் ஒருமித்தத் துணிபு. அவ்வாறு முன்னேற்றம் அடைந்ததன் நல்விளைவாய் பின்னை இலக்கியம் படைப்பதற்கு வரன்முறைகளை கண்டறிந்து உணாத்திச் சென்றனர். இவர்கள் உணர்த்திய ஒழுங்கு முறையே இலக்கணம் என்னும் பெயர் பெற்றுது.

தமிழில் உள்ள இலக்கண நூல்களில் பழைமையானது தொல்காப்பியமாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே எழுதப்பட்ட இவ்வரிய நூலின் வழியே பண்டைத் தமிழரின் நாகரீகம் அவர்களுடைய சமூதாய அமைப்பு பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இவ்இலக்கண நூலின் ஆசிரியர் பழமையான காப்பியக்குடி என்னும் தமிழர் பரம்பரையில் தோன்றிய தொல்காப்பியர் ஆவார். தொல்காப்பியர் குறிப்பிடும் வாழ்வியல் நெறிகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மக்களின் வாழ்க்கை முறை**

தொல்காப்பியர் மக்களின் வாழ்க்கையை அகவாழ்க்கை, புறவாழ்க்கை என இருவகையாகப் பிரித்துள்ளார்.

**அகவாழ்க்கை**

**'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப (தொ.பொ.அக.1)**

ஆணும், பெண்ணும் அன்போடு ஒன்றுபட்டு கூடி வாழும் காதல் வாழ்வே அகவாழ்வாகும். இவ்வாறு அகத்திலே நிகழும் இன்பத்தையே அகத்திணை என்றனர். திணை என்பது ஒழுக்கம் என்று பொருள்படும். கைக்கிளை முதலாக பெருந்திணை இறுதியாக உள்ள ஏழுதிணைகளுமே அகத்திணை எனப்படும். இந்த எழுவகைத் திணையிலும் தமிழரின் குடும்ப வாழ்க்கை அடங்கிவிடுகிறது.

**கைக்கிளை:** ஒரு தலைக்காமம். ஆண், பெண் இருவருள் ஒருவரிடம் மட்டும் காதல் உணர்வு தோன்றுவது. இதன் மூலம் தன் மீது அன்பு இல்லாத பெண்ணிடம் கூட காதல் கொள்ளும் வழக்கம் பண்டைத் தமிழகத்தில் இருந்ததை அறிய முடிகிறது.

**பெருந்திணை:** பொருந்தாக் காமம் - காமவெறி கொண்டு வாழ்தல். இந்த கைக்கிளை, பெருந்திணைகளை தொல்காப்பியர் சுருக்கமாகவே கூறியுள்ளார். ஆதலால் இந்த இரு திணைகளும் தொல்காப்பிய காலத் தமிழர்களால் போற்றப்படவில்லை என்பதை அறிய முடிகிறது.

**குறிஞ்சித்திணை** : **'சேயோன் மேய மைவரை உலகமும்'' (தொ.பொ.அக 5)**
**முல்லைத்திணை** : **'மாயோன் மேய காடுறை உலகமும்'' (தொ.பொ.அக.5)**
**மருதத்திணை** : **'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்'' (தொ.பொ.அக.5)**
**நெய்தல் திணை** : **'வருணன் மேய பெருமணல் உலகமும் (தொ.பொ.அக5)**

ஒத்த பருவமும், குணமும், அறிவும் உடைய ஒரு ஆணும், பெண்ணும் இணைந்து வாழ்வதே காதல் வாழ்வாகும். இத்தகைய மனமொத்த தம்பதிகளுக்குள் நடைபெறும் காதல் நிகழ்ச்சிகளைப் பற்றி இவ்வைந்து திணைகளும் கூறுகின்றன.

**புறவாழ்க்கை**

அகத்திணையை ஏழாக வகுத்தது போல புறத்திணைகளையும் ஏழாக வகுத்துக் கூறியுள்ளார் தொல்காப்பியர். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்ற ஏழுவகை புறத்திணைகளில் தமிழ்வாட்டில் பண்டைக் காலத்தில் நடைபெற்ற போர் முறைகளையும் தமிழ் மக்களின் வீரம், கொடை, புகழ் ஆகியவற்றையும் உணர முடிகிறது.

**மணவாழ்க்கை**

பண்டைத் தமிழரின் திருமண வாழ்க்கை, களவு, கற்பு என்று இருவகைப்படும் என்பதனை தொல்காப்பிய பொருளதிகாரம் எடுத்துக் கூறுகிறது. களவு என்பது ஒரு காதலனும் காதலியுடம் மறைவாக மணமக்களாகி மகிழ்தல். கற்பு என்பது எல்லோரும் அறிய வெளிப்படையாக இல்லறம் நடத்துதல்.



Scanned with CamScanner



சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

SHANLAX #SINCE1990

JOURNAL WITH 3.045 IMPACT FACTOR SJJ TAMIL RESEARCH

மலர் 4 சிறப்பிதழ் 1 நவம்பர் 2019

P - ISSN: 2454-3993 | E - ISSN: 2582-2810

துபாய் தமிழ்ச்சங்கம்

திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

ஸ்ரீ. எஸ்.ஆர்.என்.எம்.கல்லூரி, சாத்தூர்

தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை

குந்தவை நாச்சியார் அரசு கலைக் கல்லூரி, தஞ்சாவூர்

திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாச்சலம்

பிரபா இலக்கியப் பதிப்பகம், சங்கரன்கோவில்

மருதம் பன்னாட்டுத் தமிழாராய்ச்சிக் காலாண்டிதழ்

மற்றும்

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

பல்துறை பன்னாட்டுக் கருத்தரங்கம்

# உலக வளர்ச்சியில் உயர் கல்வியின் பங்கு

Shanlax International Journal of Tamil Research

(A Peer-reviewed-Scholarly Indexed Quarterly Journal)

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

SHANLAX INTERNATIONAL JOURNALS

editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

Scanned with CamScanner

சான்லாக்ஸ்
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# தாய்மொழிக்கல்வியும் – சமூகமேம்பாடும்

முனைவர் D. ஜெமினா மார்ஷல், M.A, M.Phil, MBA, Ph.D
தமிழ்த்துறைப் பேராசிரியர்
மார்கிரிகோரியஸ் கல்லூரி, சென்னை

மலர்: 4
சிறப்பிதழ்: 1
மாதம்: நவம்பர்
வருடம்: 2019
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

என்ற பழங்காலப் புலவரின் வரிகள் கல்வியின் முக்கியத்துவத்தினை பறைசாற்றுகின்றன. மனிதன் பல நிலைகளில் அவனுடைய சிந்தனையாலும் செயல்களாலும் குணநலன்களாலும் மாற்றங்களுக்கு உள்ளாகின்றான். இவற்றை அறிந்து கொள்ள அவன் ஏன்? எதற்கு என்ற கேள்விகளைக் கேட்கிறான். இந்த வினாக்கள் அவனுடைய அறிவு மேன்மேலும் வளர வாய்ப்பளிக்கிறது. எந்த ஒரு செயலையும் அறிய முயலுபவன் கற்பவனாகிறான். அறிவினையும் அனுபவத்தினையும் கற்பிப்பதே கல்வி ஆகும்.

## தாய்மொழிக் கல்வி

ஒரு தாய் தன் பிள்ளைக்குப் பாலூட்டும் போதும் சீராட்டும்போதும் பேசுகின்ற மொழியையே தாய்மொழி என்கிறோம். தாய் மொழியில் கல்வி கற்பது குழந்தை, தாய் பால் உண்டு வளர்வதற்கு சமமாகும் என்று அண்ணல் காந்தியடிகள் கூறியுள்ளார் ஒருவரோடு ஒருவர் கலந்துரையாட தாய்மொழி பயன்படுகிறது. நம் எண்ணங்களை வெளியிடவும், எழுதவும் தாய்மொழியே முதலிடம் வகிக்கின்றது. மாணவர்களிடையே காணப்படும் கற்பனையாற்றல், படைப்பாற்றல் சிந்தனையாற்றல் ஆகியவற்றை வளர்க்க தாய்மொழி பயன்படுகிறது. மனதில் தோன்றும் கருத்துக்களை எளிதில் பேச, எழுத தாய்மொழி உறுதுணை புரிகிறது. அடிப்படை திறன்களாகிய கேட்டல், எழுதுதல், பேசுதல், படித்தல் ஆகியவற்றினைப் பெற தாய்மொழியே சிறந்த கருவியாகத் திகழ்கிறது. தாய் மொழி மூலமாகச் சொல்லும்பொழுதும் எழுதும் போதும் ஆழமும் அழுத்தமும் அதிகமாகிப் பொருள் விளக்கம் நன்கு புரிகிறது. எனவே தான் தாய்மொழியின் துணையோடு தான் அறிவியல், கணிதம், வரலாறு போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.



Scanned with CamScanner